2009 பிப்ரவரி 23]

அந்தப் பணியை ஆரம்பிக்க இருக்கிறோம். எனவே, வழி நெடுக மோட்டல்களை அமைப்பதுதான் சரியாக இருக்கும் என்று கருதி அந்த வகையிலே போக்குவரத்துக் கழகம் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

44—

ஆரம்ப சுகாதார நிலையம்

***9825—திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, பூதலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சுகாதார மாவட்டம், புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே நாகலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்படுவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பூதலாபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதி, பூதலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 54 கிராம மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். அதோடு அருகிலுள்ள அருப்புக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த வடக்குநத்தம், வரலொட்டி, ராணிசேதுபுரம் பகுதியைச் சேர்ந்தவர்களும், முதுகுளத்தூர் தொகுதியைச் சேர்ந்த காவடிப்பட்டி, முத்துசெட்டியாபுரம்

[2009 பிப்ரவரி 23

பகுதியைச் சேர்ந்தவர்களும், கடலாடி தொகுதியைச் சேர்ந்த அன்னமநாயக்கன்பட்டி பகுதியைச் சேர்ந்தவர்களும், பூதலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். இரவில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு திடீரென்று உடல்நிலை குறைபாடு ஏற்பட்டால் அந்தப் பகுதியிலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நாகலாபுரம்தான் செல்ல வேண்டிய நிலை உள்ளது. எந்தப் போக்குவரத்து வசதியும் இல்லாத குக்கிராமங்கள் நிறைந்த மிகவும் பின்தங்கிய பகுதி அது. ஒரு ஆட்டோகூட அந்தப் பகுதியில் கிடையாது. தினமும் சுமார் 200 பேர் வெளி நோயாளிகளாகச் சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். ஆனால், அங்கு எக்ஸ்ரே வசதி கிடையாது; ஸ்கேன் வசதி கிடையாது; காம்பவுண்டு சுவர்கூட கிடையாது; நல்ல பில்டிங் வசதி கிடையாது; இரவில் மருத்துவர்கள் கிடையாது; பெண் மருத்துவர்கள் கிடையாது; எனவே, மிகவும் பின்தங்கிய அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி, பெண் டாக்டரை நியமித்து, 40 படுக்கைகள் கொண்ட, எக்ஸ்ரே, ஸ்கேன், உட்பட பல வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அதைத் தரம் உயர்த்திட வேண்டுமாய்த் தங்கள்மூலம் இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கையின்படி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று, தகுதிவாய்ந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் வசதிகொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகப் படிப்படியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. 29–9–2003 ஆம் நாளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையின் அரசாணை எண் 320–இன்படி, புதூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நாகலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. E.C.G., Scan, X-ray, Semi-Auto Analyser போன்ற நவீன உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 30–4–2007 ஆம் நாளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையின் அரசாணை எண் 142–இன்படி, அதே ஒன்றியத்தில் புதூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் தேசிய ஊரக நலத் திட்ட நிதியுதவியின்கீழ் தரம் உயர்த்தப்பட்டு, கட்டுமானப் பணிகளும் முடிவடைந்து, பொது மக்களின் பயன்பாட்டிற்காக விரைவில் திறக்கப்பட உள்ளது. புதூர் ஊராட்சி ஒன்றியத்தில், நாகலாபுரம் மேம்படுத்தப்பட்ட

2009 பிப்ரவரி 23]

ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்படுவதாலும், கூடுதலாக புதூர் ஆரம்ப சுகாதார நிலையமும் மேம்படுத்தப்பட்டு விரைவில் திறக்கப்பட உள்ளதாலும், அதே ஒன்றியத்தைச் சார்ந்த பூதலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: குக்கிராமங்கள் நிறைந்த பகுதி. ஆகையால் இதை அரசு மீண்டும் ஒரு முறை பரிசீலிக்கக் கேட்டுக்கொள்கிறேன். விளாத்திகுளம் மருத்துவமனையில் எக்ஸ்ரே மெஷின் இருக்கிறது. ஆனால் அது வேலை செய்யவில்லை. டெக்னீஷியனும் இல்லை. ஸ்கேன் இருக்கிறது, அது வேலை செய்யவில்லை. அதையும் சரி செய்யவேண்டும். குளத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தையும், பெரிலோவன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தையும் தரமுயர்த்தித் தரவேண்டும். சிவஞானபுரத்தில் ஒரு புதிய துணை சுகாதார நிலையம் அமைத்துத் தந்திட ஆவன செய்ய வேண்டுமெனத் தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமென்றே குற்றம் சொல்கிறாரா, இல்லையா என்று தெரியவில்லை; அல்லது மறுத்துப் பேசுகிறாரா என்று தெரியவில்லை. இருந்தாலும், அவருடைய கோரிக்கையின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கொல்லங்கோடு பகுதிக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை நம்முடைய அரசு தந்துள்ளது. அதற்காக நான் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, குழித்துறை அரசு

மருத்துவமனையை CEmONC மையமாகத் தரமுயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கும் நான் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், குழித்துறை மருத்துவமனையில் மயக்க மருந்து நிபுணர்கள் இன்னும் போடப்படவில்லை. X-Ray கருவி இருக்கிறது; Radiographer இல்லை. ஆகவே, மயக்க மருந்து நிபுணரையும், Radiographer-ஐயும் உடனடியாக நியமனம் செய்து, அந்த மருத்துவமனையினுடைய பணிகள் சிறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, பணியாளர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், கடந்த ஆட்சியில் பணி நியமனத் தடைச் சட்டத்தைப் போட்டதன் அடிப்படையிலே, காலியாக உள்ள பணியிடங்களைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தால், இந்த ஆட்சியினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, பணி நியமனத் தடைச் சட்டத்தை இரத்து செய்து, இப்போது பணியிடங்களை நாங்கள் படிப்படியாகப் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றோம்.

இதுவரையில் இந்தத் துறையின்மூலமாகக் கிட்டத்தட்ட 28,146 பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவொரு சாதனை என்று சொல்லலாம். இதனால் காலியாக உள்ள பணியிடங்கள் மேலும் குறைவாகி இருக்கின்றன. தகுதியான நபர்களைத் தேர்வு செய்வதில் ஏற்பட்டிருக்கிற காலதாமதத்தினால், சில இடங்களில் சில பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவை விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நூற்றுக்கும் மேற்பட்ட புதிய ஆரம்ப சுகாதார

2009 பிப்ரவரி 23]

நிலையங்களுக்குத் தமிழக அரசு அனுமதி அளித்திருக்கின்றது. இதற்கான பணிகள் எப்போது தொடங்கி, முடிவடையும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 110 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறப்பதற்குக் கடந்த வாரம்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். 28 ஆம் தேதிக்குள் அனைத்து மருத்துவமனைகளும், ஆரம்ப சுகாதார நிலையங்களும் தற்காலிகமாக அந்தந்த இடங்களில் திறக்கப்பட வேண்டுமென்று ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் அங்கு கட்டடம் கட்டுவதற்கு, ஒரு மருத்துவமனைக்கு ரூ.21 இலட்சம் நிதியும் ஒதுக்கப்பட்டு, அந்தக் கட்டுமானப் பணிகளுக்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, வெகுவிரைவில் அந்தக் கட்டுமானப் பணிகள் தொடங்கி, ஓரிரு மாதங்களில் முடிந்துவிடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

45—

சார்பதிவாளர் அலுவலகம்

***63544—திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அச்சரப்பாக்கம் தொகுதி, சித்தாமூரில் சார்பதிவாளர் அலுவலகம் மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS